## 28.3 வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த விரிவாக்கம் என்ற தலைப்பில் மாவட்ட ஊராட்சிகளுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்குதல்

ஊரக வளர்ச்சி (சி4) துறை

அரசாணை (நிலை) எண். 268 நாள் : 22.12.1999

படிக்க :

வேளாண்மை (வ(ம)நி) துறையின் 07.06.1999 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண் 220

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்க அரசுக்கு பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட உயர்நிலைக்குழு அறிக்கையிலுள்ள பரிந்துரைகளில் ''வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த விரிவாக்கம்'' என்ற தலைப்பில் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் ஒப்படைப்பு செய்து பார்வையில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. உயர்நிலைக்குழு அறிக்கை இயல் –5ல் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஆய்வு, கண்காணிப்பு மற்றும் ஆலோசனை மூலம் கூடுதல் பொறுப்புகள் வழங்க பரிந்துரைகள் செய்துள்ளது. அப்பரிந்துரைகளை ஆய்வு செய்தபின் அரசு கீழ்க்கண்டவாறு கூடுதல் பொறுப்புகளை மாவட்ட ஊராட்சிகளுக்கு வழங்கி ஆணையிடுகிறது.

**மாவட்ட ஊராட்சிகள்**

1. ஊரகப் பகுதிகளிலுள்ள சிறுபாசனக் குளங்களை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் பற்றி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சித் துறை அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.
2. முன்னாள் ஜமீன் குளங்களை சீரமைத்தல் பற்றி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சித்துறை அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.
3. தூர் எடுத்தல் மற்றும் சீரமைப்பு செய்தல் பற்றி ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் அவர்களுடன் ஆய்வு செய்யலாம்.
4. சிறுபாசன சிறப்புத் திட்டம் (முன்னாள் ஜமீன் குளங்கள் மற்றும் பொதுப்பணித்துறை குளங்கள்) பற்றி ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் மற்றும் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஆகியோருடன் ஆய்வு செய்யலாம்.
5. தேசிய வேளாண்மை வளர்ச்சி வங்கியின் (நபார்டு) உதவியுடன் சிறப்பு சிறுபாசன திட்டங்களை செயல்படுத்துதல் பற்றி பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி வங்கி (நபார்டு) மாவட்ட மேலாளர் ஆகியோருடன் ஆய்வு செய்யலாம்.

இவ்வாணை வேளாண்மைத்துறையின் 27.10.1999 நாளிட்ட அ.சா.எண் 40925/99 மற்றும் பொதுப்பணித்துறையில் 24.11.199 நாளிட்ட அ.சா.எண் 38883/டபிள்யு.2/99.1ம் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்